**கட்டுவன பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டுவன பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்குரிய இயந்திர உபகரண வாடகை வருமானமாக ரூபா 731,075 தொகை கிடைத்திருந்ததுடன் இந்த வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு வைக்கப்படாமையினால் ரூபா 438,183 தொகை மாத்திரம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ராஜபக்ச சுபிரி சந்தைத் தொகுதியில் 02 கடைகளுக்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 100,200 தொகையான வாடகை வருமானம் ஆண்டின் வருமானமாகக்

கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 65,985 தொகையான செலவினம் ஆண்டின் செலவினத்திலும் கடன்கொடுத்தோரிலும் கைவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,772,300 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,146,223 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 41 | 302 | 3 |
| (ii) | வாடகை | 18,740 | 14,224 | 3,082 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,747 | 1,206 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 46,057 | 47,516 | 11,382 |

### 2.2.2 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனவரி மதிப்பிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவைக் கடை வாடகை வருமானமான ரூபா 1,094,382 இனை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பபிரிவின் பிரகாரம் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் இந்த நிலுவைப் பணத்திலிருந்து ரூபா 436,250 தொகை அறவிடப்பட்டதாக 2015 யூலை 08 ஆந் திகதி தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 2.2.4 நீர் வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர்க்கட்டண வருமானம் ரூபா 5,476,878 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் இறுதியில் நிலுவை நீர்க்கட்டண வருமானம் ரூபா 5,158,103 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிலுவை நீர்க்கட்டண அளவு ரூபா 318,775 இனால் அதிகரித்திருந்தமையும், அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டன. நீர்மானி வாசிப்பாளரினால் நுகரப்பட்ட நீர் அலகுகளின் எண்ணிக்கை உரிய பிரகாரம் பட்டியல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்குக் கிடைக்கவேண்டிய ரூபா 67,690 தொகையான வருமானமும் கிடைத்திருக்கவில்லை. அந்த நிலுவை வருமானத்தை நீர் மானி வாசிப்பாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 5,476,878 நிலுவைத் தொகையிலிருந்து ரூபா 2,233,490 தொகையும், ரூபா 67,690 நிலுவைத் தொகையிலிருந்து ரூபா 57,525 தொகையும் அறவிடப்பட்டதாக தலைவர் 2015 யூலை 08 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,298,574 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) MG 330 என்ற மோட்டார் கிறேடர் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 105,000 தொகையொன்று தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்த்தல் தொடர்பாக மோட்டார் வாகன பரீட்சகரின் முன்னைய மற்றும் பின்னைய அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 80,329 கூட்டுத் தொகையான இடர் கடன், விஷேட மற்றும் விழா முற்பண மீதிகள் 2015 மே 27 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காலாவதியான ரூபா 402,588 கூட்டுத்தொகையான வேலைகளின் நிறுத்தி வைத்தல் பணம், இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளபடியான அதிகாரங்கள் மற்றும் பணிகளை அமுல்படுத்தும் போது பிரதேச சபைக்கு முறையற்ற வகையில் அட்டுறுவாகின்ற சகல தொகையும் பிரதேச சபை நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக தனியார் நிறுவனமொன்றிலிருந்து பிரதேசத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகை ‘‘ஊழியர் சேமலாப சங்கம்’’ என்ற பெயரிலுள்ள தனியார் கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஐந்து நபர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு ரூபா 585,616 சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(i)(i) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன்அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------------

பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் அமுல்படுத்தப்பட்ட வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 175,975 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்